**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.721/2025**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரியா | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சுதாகர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் . அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(29.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தேனி பூதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 02.10.2025 அன்று எங்கள் குடும்பத்துடன் திருச்சுழியில் உள்ள குலதெய்வ கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு திருமங்கலம் மீனாட்சி பவன் செட்டிநாடு உணவகத்தில் சாப்பிடுவதற்காக இருந்த போது அங்கு வந்த அடையாளம் தெரியாத 2 நபர்கள் மதுபோதையில் எங்களது அசிங்கமாக பேசி அடிக்க முற்பட்டார்கள். அவர்களுடன் சண்டை போட்டதில் நான் எனது மகன் மற்றும் எனது கணவர் ஆகியோர்கள் கீழே விழுந்துவிட்டோம். **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.721/2025**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **செல்வி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **இளங்கோவன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் . அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(29.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தேனி பூதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். நாங்களும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். அ.சா.1 எனது அண்ணன் மனைவி ஆவார். நான் கடந்த 02.10.2025 அன்று அ.சா.1 மற்றும் நானும் எனது குடும்பத்துடன் திருச்சுழியில் உள்ள குலதெய்வ கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு திருமங்கலம் மீனாட்சி பவன் செட்டிநாடு உணவகத்தில் சாப்பிடுவதற்காக இருந்த போது அங்கு வந்த அடையாளம் தெரியாத 2 நபர்கள் மதுபோதையில் எங்களை அசிங்கமாக பேசி அடிக்க முற்பட்டார்கள். அவர்களுடன் சண்டை போட்டதில் எனது அண்ணன் மற்றும் அ.சா.1 மற்றும் எனது அண்ணன் மகன் ஆகியோர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை

**மறுவிசாரணை**. இல்லை